பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4
25 08-2025 MONDAY 12.40 PM
ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) புதுதில்லி வந்துள்ள *Fiji* பிரதமர் திரு. *Sitiveni Rabuka*-வுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து பேச்சு நடத்தி வருகிறார்.

2) அரசியல் சாசனத்தின் 130-ஆவது திருத்த மசோதாவுக்கு எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிப்பது ஜனநாயகத்திற்கு எதிரானது என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

3) சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக செயல்பட்டவர் தேமுதிக தலைவர் விஜயகாந்த் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் புகழாரம் சூட்டியுள்ளார்.

4) யுக்ரைனில் அமைதி திரும்புவதற்கான நடவடிக்கைகளில் அந்நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்று கனடா வலியுறுத்தியுள்ளது.

5) காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Preetismita Bhoi* தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் –

<<<<<>>>>>

மூன்று நாள் பயணமாக புதுதில்லி வந்துள்ள *Fiji* பிரதமர் திரு. *Sitiveni Rabuka*-வுடன், பிரதமர் திரு நரேந்திர மோடி தற்போது பேச்சு நடத்தி வருகிறார்.

அவருடன் வந்துள்ள தூதுக்குழுவினருடன் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து பேச்சு நடத்துகிறார்.

*Fiji* பிரதமர், இன்று மாலை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வை சந்திக்கவுள்ளார்.

<<<<<>>>>>

அரசியல் சாசனத்தின் 130-ஆவது திருத்த மசோதாவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போராடுவது ஜனநாயகத்திற்கு எதிரான செயல் என்று உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில், தனியார் செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த அவர், சிறையில் இருந்துகொண்டே அரசு நிர்வாகத்தை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர்கள் முயலுவதாக குற்றம் சாட்டினார்.

பிரதமரையும், இந்த சட்டத்திருத்தத்திற்கு உட்படுத்த வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு மேல் சிறை தண்டனை வழங்கப்பட்டால், அவர் நாடாளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினராக நீடிக்க இயலாது என்றும் திரு அமித் ஷா குறிப்பிட்டார்.

நாடாளுமன்ற கூட்டுக்குழு 130-ஆவது அரசியல் சாசன திருத்தத்தை ஆய்வு செய்வதற்கு எதிர்க்கட்சிகள் எதிர்த்தாலும், அந்தக்குழு தற்போதுள்ள உறுப்பினர்களுடன் சிறப்பாக தனது கடமையை செய்யம் என்றும் அவர் திட்டவட்டமாக தெரிவித்தார்.

குடியரசு துணைத்தலைவர் பதவிக்கான தேர்தலில் தென்னிந்தியாவை சேர்ந்த திரு சி பி ராதாகிருஷ்ணனை நிறுத்தியது சரியான முடிவுதான் என்று அவர் கூறினார்.

குடியரசு துணைத்தலைவர் பதவியை திரு ஜெக்தீப் தங்கர் தமது உடல்நலக்குறைவு காரணமாகவே ராஜினாமா செய்தார் என்றும் திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தேமுதிக நிறுவனர் மறைந்த விஜயகாந்தின் பிறந்தநாளை முன்னிட்டு, மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் அவருக்கு மரியாதை செலுத்தியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு செயல்பட்டவர் பத்மபூஷன் விஜயகாந்த் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

ஏராளமான மக்கள் பணிகளை செய்ததன்மூலம் நமது நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்தவர் விஜயகாந்த் என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் அனைத்துத்தரப்பு மக்களுக்கும் பிடித்தமான திரைக்கலைஞராகவும், அரசியலில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவராகவும் விஜயகாந்த் சிறப்பாக செயல்பட்டார் என்றும் டாக்டர் எல். முருகன் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<>>>>>

சர்வதேச விண்வெளி நிலையத்தில் தமது சிறப்பான பணியை முடித்து தமது சொந்த ஊர் திரும்பிய குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவுக்கு லக்னோவில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உத்தரப்பிரதேச துணை முதலமைச்சர் திரு Brajesh Pathak, லக்னோ மேயர் திருமதி சுஷ்மா கார்கவார் ஆகியோர் விமான நிலையத்தில் அவரை வரவேற்றனர்.

அங்குள்ள பள்ளியில் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், திரு சுபான்ஷு சுக்லா பங்கேற்று பள்ளி குழந்தைகளுடன் தமது வெற்றிப்பயண அனுபவத்தை பகிர்ந்துகொண்டார்.

துணை முதலமைச்சர் திரு Brajesh Pathak பேசுகையில், லக்னோ நகரத்திற்கு வந்து மக்களை உற்சாகப்படுத்தி நகருக்கு பெருமை சேர்த்துள்ளதாக குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் ஏழை எளிய மக்கள் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், இலவச மருத்துவ காப்பீடு பெற்று பயனடைந்து வருகின்றனர்.

ராசிபுரம் வட்டம் முத்துக்காளிபட்டியை சேர்ந்த பயனாளி திரு லோகேந்திரன் தமக்கு ஏற்பட்ட விபத்துக்கு பிரதமரின் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்மூலம் அனைத்து மருத்துவ உதவியும் கிடைத்ததாக எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

*(Sound Byte – லோகேந்திரன் – 33 Sec.)*

<<<<<>>>>>

*விநாயகர் சதுர்த்தி பண்டிகையை முன்னிட்டு, நாடு முழுவதும் பல்வேறு வகையான சிலைகளை செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.*

*தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் விநாயகர் சிலை தயாரிப்புப்பணிகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் வழிகாட்டுதலின்படி பல அடி உயரத்துக்கு இயற்கை முறையிலான விநாயகர் சிலைகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.*

*சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கில் மாட்டு சாணம் மற்றும் இயற்கை பிசினை கொண்டு விநாயகர் சிலைகளை தயாரிப்பதாக ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த சண்முகம் கூறுகிறார்.*

*(Sound Byte – சண்முகம் – 50 Sec.)*

*<<<<<>>>>>*

*நாட்டின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமுதல் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*குஜராத், ஒடிஷா, ராஜஸ்தான், உத்தராகண்ட், இமாச்சலப்பிரதேசம் மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அதிகனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*அருணாச்சலப்பிரதேசம், அஸ்ஸாம், மேகாலயா, பீகார், சட்டீஸ்கர், ஹரியானா, பஞ்சாப், ஜம்மு காஷ்மீர் ஆகிய மாநிலங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் வானிலை ஆய்வு மைய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

இந்நிலையில், தலைநகர் தில்லியில் இன்று அதிகாலை இடியுடன் கூடிய மிதமான மழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இமாச்சலப்பிரதேசத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக, மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்துள்ளது.

கனமழையால் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக, இரண்டு தேசிய நெடுஞ்சாலைகள் உட்பட பல்வேறு சாலைகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக மாநில அவசர நிலை செயல்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், வங்கக்கடலின் வடமேற்கு பகுதியில் இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

ரஷ்யாவிலிருந்து அதிக அளவு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும் சீனாவுக்கு, அமெரிக்கா கூடுதல் வரிகள் எதையும் விதிக்கவில்லை என்று அமெரிக்க துணை அதிபர் திரு J D Vance தெரிவித்துள்ளார்.

ஒரு செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த பேட்டியில், யுக்ரைன் பிரச்சினைக்கு தீர்வுகாண தங்களுக்கு உதவுமாறும் சீனாவிடம் பல்வேறு தரப்பிலும் அமெரிக்கா வலியுறுத்தி வருவதாக தெரிவித்தார்.

<<<<<>>>>>

யுக்ரைனில் அமைதி திரும்புவதற்கான நடவடிக்கைகளில் எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் அந்நாட்டின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை கனடா ஆதரிப்பதாக அந்நாட்டு பிரதமர் திரு மார்க் கார்னே தெரிவித்துள்ளார்.

*யுக்ரைன் அதிபர் திரு ஜெலன்ஸ்கியிடம் இதனை தெரிவித்த கனடா பிரதமர், அமைதிக்கான நடவடிக்கைகள் பாதுகாப்பான சூழ்நிலையில் இடம்பெறும் எனில் கனடா தனது படைகளை அனுப்பாது என்றும் தெரிவித்தார்.*

*<<<<<>>>>>*

*காமன்வெல்த் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Preetismita Bhoi தங்கப்பதக்கம் வென்றார்.*

*அகமதாபாதில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் ஜூனியர் 44 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*--------------*

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று மகளிர் குழு பிரிவில் வெண்கலப்பதக்கம் வென்றது.*

*கஜகஸ்தானில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் மனுபாக்கர், ஈஷாசிங், சிம்ரன் பிரீத் கவுர் அடங்கிய குழு இப்பதக்கத்தை கைப்பற்றியது.*

*மேலும், இப்போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிஸ்டல் பிரிவில் மனுபாக்கர் மற்றும் ஈஷா சிங் இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.*

*<<<<<>>>>>*